பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

ஈசுர 19 ஐப்பசி 19 ஜுல்ஹஜ்: 21 இதழ் 265
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-11-77

அரசியல் சட்டத்திருத்த தெரிவுக் குழு:

# தொண்டமான், சிறிமா மைத்திரி நியமனம்

## ஜே. ஆர். தலைமை வகிப்பார்

கொழும்பு, வியா. அரசியல் சட்டத்திருத்தம் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேசிய அரசுப் பேரவைக் குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள் இன்று பேரவையில் வெளியிடப்பட்டன.

இக்குழுவின் தலைவராக பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இருப்பார். நுவரேலிய மஸ்கெலிய தொகுதி மூன்ருவது உறுப்பினர் திரு. எஸ். தொண்டமான், சிறில

(6-ம் பக்கம் பார்க்க)

வங்கிகள்—தபால் நிலையங்களில்

# ஆசிரியர்களின் சம்பளங்களை அதிபர்கள் வாங்க மறுப்பு

## வழிப்பறி கொள்ளைகள், உயிர் அபாயம் பற்றி கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி ஆசிரியர்களுக்கான சம்ப[illegible] அல்லது தபால் நிலையங்களிலிருந்தோ அதிபர்கள் இனிமேல் சென்று பெற்று வருவதில்லை என வடமாகாண அதிபர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. இ. தியாகராசாவிடம், கடந்தமாதம் 24-ம் திகதி சம்பளப்பணம் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதை தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் வடமாகாண அதிபர் சங்கத்தின் அவசரபொதுக்கூட்டம்நேற்று மாலை நடைபெற்றது.

இக் கூட்டத்தில், அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும், ஆசிரியர்களுக்கும் ஏனைய பாடசாலை ஊழியர்களுக்குமான மாதச் சம்பளத்தை அதிபர்கள் பொறுப்பாக இந்[illegible] முறை மிகவும் ஆபத்தானது என்றும் பொறுப்பான அதிபர்களின் உயிருக்கே ஆபத்து என சுட்டிக் காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. இ. தியாகராசாவின் முறையீட்டுக் கடிதம் ஆராயப்பட்டது.

ஆசிரியர்கள் சம்பளப் பணத்திற்கு அதிபர்கள் பொறுப்பாளிகள் அல்லவென்றும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை கல்வித்திணைக்களமே வேறு ஒழுங்குகள் மூலம் சகல ஆசிரியர்களுக்கும் வழங்கவேண்டும் என்று வடமாநிலக் கல்வி அதிபரை கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் கடமை நேரத்தில் நடைபெற்ற வழிப்பறி கொள்ளைக்கு அக்கல்லூரி அதி[illegible] பொறுப்பாளியாகக்கொள்ளக் கூடாதென்றும் தீர்மானிக்கப் பட்டது. (அ)

"சம்பளப்பணம் எடுத்துச் செல்கையில்

## பாடசாலை அதிபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும்"

யாழ்ப்பாணம், வெள்ளி "சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் தமது உத்தியோகபூர்வமான கடமையை நிறைவேற்றும்போது அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டதால், இச் சம்பவம் தொடர்பாகஅவரைப்பொறுப்பாளியாகக் காணக்கூடாது. யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களும் சம்பளத்தை வங்கிகளிலிருந்தோ, தபால் நிலையங்களிலிருந்தோ எடுத்துச்செல்லும் போது அரசாங்கம் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும். இவ்விவகாரம்பற்றி வடமாகாணக் கல்லூரி அதிபர்கள் சங்கம் எடுக்கும் நியாயபூர்வமானநடவடிக்கைகளுக்கு எமது சங்கம்பூரண ஒத்துழைப்பை வழங்கும்."

இவ்வாறு கூறும் தீர்மானம் இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக்கிளைப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது, மாவட்டத் தலைவர் திரு. வ. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்ருெரு தீர்மானம் வருமாறு:

"சமீபத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபரிடமிருந்து பாடசாலை ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை அதிபரும் ஏனைய இரு ஆசிரியர்களும் காரில் பாடசாலை நோக்கி எடுத்துச் சேன்றுகொண்டிருக்கும்சமயத்தில் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டதை, இலங்கைத் தேசிய ஆசிரிய சங்கத்தின் யாழ். மாவட்டசபை வன்மையாகக் கண்டிப்பதுடன் அச்சம்பவம்பற்றி வடமாகாணக் கல்லூரி அதிபர்களின் சங்கத்தினருக்கு தனது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது."

தீர்மானப் பிரதிகள் மேல் நடவடிக்கைகளுக்காக வடமாநில வித்தியாபதிபதிக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. (கா-அ)

கோண்டாவில்

## உப தபால் நிலையத்தில் ரூ. 2,000 கொள்ளை!

யாழ்ப்பாணம், வெள்ளி கோண்டாவில் உப-தபால் நிலையத்தில் இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் இரண்டாயிரம் ரூபாவை நேற்றுக் காலை கொள்ளையடித்துள்ளனர்.

சயிக்கிளில் வந்த இரு இளைஞர்கள் உப-தபால்நிலைய அதிபர் எஸ். திருநாவுக்கரசுவிடமிருந்த பணத்தை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்ததாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

கோப்பாய் பொலிஸார் இச் சம்பவம்பற்றி விசாரணை செய்துவருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்காக

## இந்தியா ஜெர்மன் அரசுகள் நன்கொடை

கொழும்பு, வியாழன் அண்மையில்ஏற்பட்ட இனக் கலவரங்களினுல் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு இந்தியாவும் மேற்கு ஜெர்மனியும் 14 லட்சம் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

இந்தியத் தூதுவர் திரு. குர்பாச்சான்சிங் இன்று காலை பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவிடம் 8 லட்சம் ரூபாவைக் கையளித்தார்.

இலங்கையிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதுவர் திரு. எச். லோக்கர், திரு. ஜே. ஆரிடம் இன்று 6 லட்சம் ரூபாவை வழங்கினுர். (இ)

## கொலை வழக்கில் எம். பி. விடுதலை

கொழும்பு, வியா. மாவத்தகம எம். பி. திரு. ஜி. எம். பிரேமரத்ன மீதான கொலை வழக்கில் ஜூரர்கள் எதிரி நிரபராதி என அறிவித்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மாவத்தகம நகரசபை தலைவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக இவர் மீது இக்கொலை வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது. ஜூரர்களின் முடிவையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதாவன் எதிரியை விடுதலை செய்தார்.

# தமிழ்நாட்டில் தொடர்ந்து வன்முறை: பலர் கைது

சென்னை, நவ. 3 தமிழ் நாட்டில் இன்றும் தொடர்ந்து பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

தஞ்சையில் பல இடங்களில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து ஆயுதப் பொலிஸார் ஆங்காங்கே காவலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கோடிக்கரையில் ரயில்பெட்டியொன்று தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

வேதாரண்யத்தில் அப்பகுதி எம். எல். ஏ. உட்பட 100 தி. மு. க. உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். மன்னுர் குடியில் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

பல இடங்களிலும் கைது செய்யப்பட்ட 307 தி. மு க தொண்டர்கள் இன்று வேலூர் மத்திய சிறைக்கு கொண்டுவரப்பட்டனர். வேலூரில் மாத்திரம் நேற்று 107 பேர் கைது செய்யப்பட்டனர்.

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்னுல், கலைஞர் கருணுநிதியை விடுதலைச் செய்யும்படி கோரி மறியல் செய்த 64 தி. மு க தொண்டர்கள் இன்று கைது செய்யப்பட்டனர்.

சேலத்தில் இதுவரை மொத்தம் 700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து தமிழ்நாடு ஜனதா கட்சித் தொண்டர்கள் ஆர்பாட்ட ஊர்வலம் நடத்த முன் அறிவித்தல் கொடுத்துள்ளனர்.

சங்கானை ப. நோ. கூ. சங்கம்

## மூவர் குழு நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க நெறியாளர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் பகுதி, உப அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமையிலான இக்குழுவில், பிரதமகல்வி அதிகாரி திரு. எம். குணரத்தினம், திரு. ஆர். ஜெகநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சங்கத்தின் தலைவர் திரு. கே. சி. லோகேஸ்வரன், சங்கத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுத்துவருவதுடன், நீண்டகாலம் பணியாற்றிய ஊழியர்களை, நிரந்தரமாக்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்துவருகின்ருர். (க)

# மூன்றுவது நினைவாஞ்சலி

திருமதி பார்பரா சகாயமணி மரியதாஸ்

பிறப்பு 4 - 12 - 1952



இறப்பு 4 - 11 - 1974

''வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை''

எனவே சீவியத்தில் அவரை அன்பு செய்தவர்கள், மரணத்திலும் நேசிப்போமாக.

கணவன், மகன்

றஞ்சஞுஸ்,
பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம். 7571

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல. ஈடு 332

ஊர்காவற்றுறை கரம்பன், தி. அ. இராசையாபிள்ளை மைம்பெண் எலிசபெத் முத்தம்மா

—வழக்காளி

எதிராக

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் இராசையா மார்க்கண்டு

—எதிராளி

ஈடு/332 ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1977-ம் ஆு நவம்பர் மீ 30 உ (30-11-77) புதன்கிழமை முந்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 8,730/- மேலும் இதில் 5,000/- ரூபாவுக்கு 08-11-76 தொடக்கம் 04-02-77 வரை வருடமொன்றுக்கு 18% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 9% வீதவட்டியும் வழக்குச்செலவு ரூபா 492-16 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று கரம்பன் இறை ''போத்தன் தனுவிலும் ஆலடியிற் தனுவிலும்'' கிழக்கு மேற்காக 380 அடி நீளமும், வடக்குத் தெற்காக 72 அடி அகலமும்கொண்ட நிலப்பரப்பு (10) பத்தும் தெற்கெல்லையிலிருக்கும் இரண்டு கிணறுகளில் அரைவாசிப்பங்கும். எல்லை கிழக்கு பொன்னம்பலம் பொன்னுச்சாமியினுதம், வடக்குநாகராசா பெண் நீலாம்பிகைக்கும் வீரகத்தி வேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள் மேற்கு கதிரவேலு தம்புவினுதனம் தற்போது எனக்குரிய ஆதனம் தெற்கு செல்லையா தம்புவினுதனம் இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

''இராசகிரி''
643, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம், 7573

## புத்தூர் கிராமசபை
## ஒப்பந்தக்காரரைப் பதிவுசெய்தல்

புத்தூர் கிராமசபையினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் 29-11 77 வரை பதிவு செய்யப்படவுள்ளனர். பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரம் இக்காரியாலயத்தில் வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் ஒவ்வொருவரும்

1. அப்பகுதி உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும்,
2. முன்பு ஒப்பந்த வேலைகள் செய்த அனுபவமிருப்பின் அவை தொடர்பான விபரங்களும்,
3. வேறு அரச உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்திருப்பின் பதிவு தொடர்பான விபரங்களும், சமர்ப்பித்தல்வேண்டும்.

ஒப்பந்தக்காரர் கீழ்க்காணும் அட்டவணைப்படி பதிவுக் கட்டணம் செலுத்தியபின் பதிவுசெய்யப்படுவர்.

| அட்டவணை | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1-ம் பகுதி ரூபா 20,000க்கு மேற்பட்ட தொகைக்கு | 25/- |
| 2-ம் பகுதி ரூபா 10,000/- — 20,000/- இடைப்பட்டதொகைக்கு | 15/- |
| 3-ம்பகுதி ரூபா 10,000/-ற்குகீழ்ப்பட்டதொகை | 10/- |

பதிவுசெய்யப்பட்டோர் தங்கள் பதிவுகள் இரத்துச் செய்யப்படாவண்ணம் வருடாவருடம் புதுப்பித்தல்வேண்டும்.

மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கா. மாணிக்கவாசகர்
விசேட ஆணையாளர்,
புத்தூர் கிராமப்பிரதேசம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
புத்தூர், 25-10-77. 7577

## கேள்வி விளம்பரம்
### அச்சுவேலி
### கிராமாட்சி மன்றம்

1. 1978-ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் குத்தகைகளுக்கு கேள்விகள் 16-11-1977-ந் திகதி பி.ப.3-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. மாட்டிறைச்சிக் கடை இல. 1, 2.
2. ஆட்டிறைச்சிக் கடை இல. 1.
3. தம்பாலை / வளலாய் மரக்கறிச் சந்தை

முறையே கேள்விப் பிணைகள் ரூபா 100/-ம், கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் 14-11-1977-ந் திகதியன்று பி. ப 3மணி வரை காரியாலயத்தில் செலுத்தப்படுமிடத்து கேள்விப் பத்திரம் விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

2. 1978-ம் ஆண்டிற்கு ஒப்பந்தகாரர்கள் வழங்குநர்களாக பதிவுசெய்ய விரும்புவர்கள் தங்கள் விண்ணப்பங்களை, விண்ணப்பிக்கும் விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு 16-11-1977-ந் திகதிக்குள் அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்படுகின்றது.

சி. க. அருணாசலம்,
(ஒப்பம்)
விசேட ஆணையாளர்,
அச்சுவேலி கிராமாட்சி மன்றம்.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
அச்சுவேலி, 1-11-1977. 7578

### 1973-ம்ஆண்டின் 44-ம்இலக்க நீதிநிர்வாகச்சட்டத்தின் 283-ம் பிரின்கீழ்

ஏழாலை என்னுமிடத்தைச் சேர்ந்த செல்லப்பா ஜேசுதாசன் நாகலிங்கத்தின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் மற்றும் பெறுமதிகள் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவரி
வலயம்: யாழ்ப்பாணம்
இல. 397

ஏழாலை செல்லப்பா ஜேசுதாசன் நாகலிங்கம் கைம்பெண் பூரணம்.

விண்ணப்பகாரி

ஆகியவருக்கும்

1. ஏழாலையிலிருந்து தற்பொழுது ஐக்கிய அமெரிக்கா உர்பான இல்னேயிசில் இருக்கும் சாமுவேல் ஜெபரத்தினம் சுகேந்திரகுமார் நாகலிங்கம்.
2. ஏழாலை நாகலிங்கம் மகள் றுத் சாந்தகுமாரி ஆகியவர்களுக்குமிடையில்

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 29-8-1977 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் உள்ள கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென்பதை திருப்தியடைந்ததன்பேரில் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ந் திகதி அல்லது அதற்கு முன்னதாக எவராயினும் எதிர்க்காரணங்கள் காட்டினாலன்றி மேற்படி விண்ணப்பகாரி காலஞ்சென்றவரின் கைம்பெண் என்றவகையில் மேற்படி காலஞ்சென்றவரின் மரணசாதனமற்ற சொத்துக்களுக்கான நிர்வாகப்பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவரெனவும் அவ்வண்ணமே அது வழங்கப்படுகின்றதென்றும் யாழ்ப்பாண நீதிநிர்வாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால்கட்டளையிடுகின்றேன்.

1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதி.

ஒப்பம்:
கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி
7566

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வேலைநீக்கம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 18 கூட்டுறவுப் பரிசோதகர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த அரசாங்க காலத்தில் நியமனம் பெற்றவர்கள் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் காட்டப்படவில்லையாம்.

வேலைநீக்கம் செய்யப்பட்டபோது 1மாத சம்பளமும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. [ச]

## இயல்மன்றம் அங்குரார்ப்பணம்

மாவிட்டபுரம், வியா.

கிளிநொச்சி பிரதேச நுண்கலைக்கழக ஆதரவில், இயல் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் திரு. க. செ. வீரசிங்கம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்:- தலைவர்- திரு நா. சோதிநாதன், உப தலைவர்- திரு. பொன். சபாபதி, செயலாளர். திரு. ப. வை. ஜெயபாலன், உப செயலாளர்-திரு. க. இராசலிங்கம், பொருளாளர்- செல்வி. பொ. சிதம்பரப்பிள்ளை, பிரசார செயலாளர்- திரு. கே. என். நடராசா. நிர்வாகசபை- திரு. க. செ. வீரசிங்கம், திரு. ந மகேசன், திரு. ஐ. துரைராஜா.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,வெள்ளி

கைதடிமேற்கு சனசமூக நிலையத்தின் 27 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. நா. ஸ்ரீரங்கநாதன், உபதலைவர் திரு. சு.பேரின்பலிங்கம், செயலாளர் திரு. இ. ஸ்ரீகுகஞானசோதி, உப செயலாளர் திரு. க. பூபாலசிங்கம், பொருளாளர், திரு.கதிர்காமநாதன். மற்றும் 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## வீடமைப்புத் திட்டம்

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு நகரசபைச்சேரி ஒழிப்பு வீடமைப்புத் திட்டத்திற்காக உள்ளூராட்சி திணைக்களம் ரூபா 40,000/- ஒதுக்கியுள்ளதாக வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் அளவான வீடுவளவு விலைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7567, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 7567

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 7 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய கேம்பிறிச் ஏ 60 காரொன்று விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 276, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7576

நவீன முறையில் செய்யப்பட்ட தேனீர்க் கடைக்கு தேவையான இரண்டு கவுண்டர்கள் (Counter) விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடவும். திறிகொயின்ஸ் ஹோட்டல், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7558

### WANTED

''Wanted House of Office space in ground floor in Jaffna town for an established Accounting Firm inColombo Please write in detail. Advt. No 7579 C/o Eelanadu Limited' Jaffna''. 7579

## ஒலிபரப்பு ஊழியர் வெற்றி

யாழ்ப்பாணம்,வெள்ளி

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஒலிபரப்பு நிலைய ஊழியர்களுக்கும் தட்டாதெரு கலாஜோதி விளையாட்டுக்கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைப்பந்தாட்டப் போட்டியில் ஒலிபரப்பு நிலையத்தினர் 1-0 கோல்களால் வெற்றியீட்டினர்.

(கெ-இ)

## எம். பி.யிடம் கோருவர்

சுழிபுரம், வியா.

சுழிபுரம் கிராமசபை சோலைவரி அதிகரிப்புத் திட்டத்தை உடன் கைவிடச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு,த. திருநாவுக்கரசுவை வேண்டுவதென சபை வரியிறுப்பாளர்களால் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

கிராமம் தோறும் குழுக்களை நியமித்து மக்கள் எதிர்ப்பை வலுப்படுத்துமாறும் நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. [உ]

சொற்பப் பிரதிகளே உள்ளன:

## தமிழ் ஈழம்

நாட்டு எல்லைகள் —
வரலாற்றுச் சான்றுகளுடனும்
ஒன்பது வரை படங்களுடனும்கூடிய ஆராய்ச்சி நூல்
விலை — 5/-

ஆக்கியோன் ஜே ஆர். சின்னத்தம்பி
இளைப்பாறிய நிலஅளவைப் பிரதி மா அதிபர்

ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை
213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 7570

## இலங்கைப் பல்கலைக் கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள் 1978

(யாழ்ப்பாண மாவட்டம்)

பாடநெறிகள்: சட்டம் / கலை / வர்த்தகம்
(தமிழ்/ஆங்கிலம்)

1977 ஏப்ரலில் நடைபெற்ற க. பொ. த. (உயர்) பரீட்சையில் 4 பாடங்களில் அல்லது அதற்கு முன்னர் இரண்டு தடவைகளில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 25 வயதிற்கு மேற்பட்டவர்களாயின் 3 பாடங்களில் பெற்ற சித்தி போதுமானது.

விபரங்களைப் பெறுவதற்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் ரூ. 2/- அஞ்சற்கட்டளை அனுப்பவும்.

விண்ணப்ப முடிவு திகதி 27-11-1977.

REGISTRAR
External Studies Organization
80, Lauries Road, Colombo-4 7575

# சகல நாடுகளும் அணு ஆயுத உற்பத்தியை உடன் நிறுத்த வேண்டும்

## நிரந்தர அமைதிக்கு இதுவே தகுந்தவழி என்கிறார் பிரஷ்னேவ்

மாஸ்கோ, நவ. 3

"சகல அணு ஆயுத உற்பத்திகளையும், அணுகுண்டு வெடிப்பு சோதனைகளையும் உலக நாடுகள் உடனடியாக நிறுத்தவேண்டும்."

சோவியத் யூனியன் அதிபரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் மேற்கண்டவாறு சகல உலக நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"சோவியத் அக்டோபர் புரட்சி"யின் 60-வது ஆண்டு நினைவு விழாவை ஒட்டி சோவியத் யூனியனில் நடைபெறும் ஒருவார தொடர் வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. பிரஸ்னேவ் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அணு ஆயுத உற்பத்தி, அணுகுண்டு வெடிப்பு சோதனைகளை சகல நாடுகளும் நிரந்தரமாகத் தடை செய்வதன் மூலமே உலகில் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியும் என்றும் திரு. பிரஷ்னேவ் கூறியுள்ளார்.

**பிரிட்டன் அமெரிக்கா வரவேற்பு**

திரு. பிரஷ்னேவின் இந்த வேண்டுகோளை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் வரவேற்றுள்ளன. (இ)



# 78-ம் ஆண்டு பிற்பகுதியிலேயே பாக். பொதுத்தேர்தல்!

## ஒரு வருடத்திற்கு சாத்தியமில்லை என்கிறார் இராணுவத்தலைவர்

அங்காரா, நவ. 3

பாகிஸ்தானில் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் தேர்தலை நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் கிடையாதென்று இராணுவத் தலைமை அதிகாரி ஜெனரல் ஸியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது பத்திரிகையாளரிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1978ம் ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்திலேயே பொதுத் தேர்தல் நடத்தமுடியுமென்றும் ஜெனரல் ஹக் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு எதிராகச் சமத்தப்பட்டுள்ள வழக்குகளை விசாரித்து முடிக்கவே இன்னும் நான்கு மாதங்களுக்கு மேல் செல்லுமென்றும் ஜெனரல் ஹக் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். (இ)

## தூதுவர்களை அமெ. திருப்பி அழைத்தது

வாஷிங்டன், நவ. 3

தென் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்கா தனது இரண்டு தூதுவர்களை திருப்பி அழைத்துள்ளது.

தென் ஆபிரிக்காவின் இனத்துவேஷக் கொள்கைகளுக்கு எதிராக அந்நாட்டுடனான பொருளாதார ராஜதந்திர உறவுகளை மறுபரிசிலனை செய்வது என்ற அமெரிக்காவின் தீர்மானத்தை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் தெரிவித்துள்ளார். (இ)

# ஆயுதமுனையில் 7 பேர் பணயம்

## வங்கிஒன்றில் தனிநபர் தீரம்

மொன்றியேல், நவ. 3

மொன்றியேலில் உள்ள வங்கி ஒன்றில் ஆயுதம் தாங்கிய 7 பேரை ஒருவன் பணயக் கைதிகளாக வைத்துள்ளான்.

கைதுசெய்யும் நோக்குடனோ தாக்கும் நோக்குடனோ தம்மை யாராவது அணுகினால் அடுத்த நிமிடமே பணயக் கைதிகள் கொலைசெய்யப்பட்டு விடுவார்வார்கள் என்று அவன் பயமுறுத்தியுள்ளான்.

வங்கியைச் சுற்றிக் காவலைப் பலப்படுத்தியுள்ள பொலிஸார் பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## இந்திராவின் உத்தரவின்பேரில்

# பத்திரிகைக்காரியாலயத்தில் மின்விநியோகம் நிறுத்தப்பட்டதாம்

புதுடில்லி, நவ. 3

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் இல்லத்தில் நடைபெற்ற உயர் அதிகாரிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி திருமதி காந்தியின் பணிப்பின் பேரில் 75-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி பத்திரிகைக் காரியாலயம் ஒன்றின் மின்சார விநியோகத்தை நிறுத்துமாறு முன்னாள் டில்லி லெப்டினன்ட் கவர்னர் உத்தரவிட்டிருந்தாராம்.

முன்னாள் டில்லி லெப்டினன்ட் கவர்னர் திரு. கிஷன் இங்கேநேற்று ஷாகமிஷன் முன்னிலையில் இதுபற்றி தெரிவித்தார்.

திருமதி காந்தியின் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்குத் தாம் கட்டுப்பட்டுள்ள கருதியமையாகத்தாம் மின்விநியோகத்தை நிறுத்த உத்தரவிட்டிருந்ததாகவும், அந்த உத்தரவு சட்ட பூர்வமோ சட்டவிரோதமோ என்று கூடத்தாம் எண்ணிப் பார்க்கவில்லை. என்றும் திரு. இங்தெரிவித்தார்.

திருமதி காந்தி அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் காந்தியின் இல்லத்தில் கூடிய பின் மேற்குறிப்பிட்ட தினத்தன்று பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் கைதுசெய்யப்படுவார் என்றும் இதனை அடுத்து சட்டப் பிரச்னைகள் எழலாம் என்றும் தமக்கு கூறப்பட்டிருந்தது என்றும் திரு. சிங் தெரிவித்தார். (உ)

## அரிசி இறக்குமதியில்

# 50 சதவீத வெட்டு!

## ஜனவரிமுதல் நல்லரக அரிசி

கொழும்பு, வியாழன்

அரிசி இறக்குமதியில் ஐம்பது வீதம் குறைக்க, அரசாங்கம் தீர்மானித்துள்ளது!

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். பீ. ஹேரத் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், இப்புதிய நடவடிக்கை அடுத்த ஆண்டுமுதல் அமுலுக்குவரும் என்று கூறினார்

நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் திரு. ஹேரத் அரிசி இறக்குமதி சம்பந்தமாகத் தெரிவிக்கையில், 1976-ல் மொத்தம் 400,000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது என்றும் இவ்வருடத்தில் அரிசி இறக்குமதி 560,000 தொன்னாக அதிகரித்திருக்கிறது என்றும் கூறினார்.

"இப் பொழுது பொது மககளுக்கு விநியோகிக்கப்படும் அரிசி மட்டரகமாக இருப்பதாக எனக்குப் புகார்கள் கிடைத்துள்ளன. ஜனவரி முதல் நல்லரக அரிசி விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்" என்று தெரிவித்த அமைச்சர் ஹேரத், அடுத்த ஆண்டு முதல் அரிசி இறக்குமதியில் ஐம்பதுசதவீத வெட்டு இருக்கும் என்றும் கூறினார்.

# கருணாநிதி விடுதலைகோரி

## மாபெரும் மௌன ஊர்வலம்

### ஞாயிறன்று நடத்த ஜனதா கட்சி ஏற்பாடு

சென்னை, நவ. 3

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும் தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதியையும் மற்றும் தி. மு. க. தொண்டர்களையும் விடுதலை செய்யுமாறு கோரியும் தமிழ்நாடு அரசின் பாரபட்சமான நடவடிக்கையைக் கண்டிக்கும் முகமாகவும் தமிழ்நாட்டில் ஜனதா கட்சி மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இந்த மௌன ஊர்வலத்தை நடத்த ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக் கிளைத் தலைவர் திரு. லட்சுமணன் ஏற்பாடு செய்துள்ளார்.

இதேவேளையில் திருமதி காந்தியின் தமிழ்நாட்டு விஜயத்தின்போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடைபெறும்போது திருமதி காந்தி முன்னர் புதுடில்லியில் கைதுசெய்யப்பட்டபோது தமிழ்நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்தும் விசாரிக்கப்படவேண்டுமென்றும் திரு. லட்சுமணன் தமிழ்நாடு அரசைக் கோரியுள்ளார். (இ)

ஷா கமிஷன் முன்

## நவம்பர் 21, 23ல் இந்திரா விசாரணை

புதுடில்லி, நவ. 3

திருமதி இந்திரா காந்தியை இம்மாதம் 21, 23ந் திகதிகளில் ஷா கமிஷன் முன்னிலையில் ஆஜராகுமாறு கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

இம்மாதம் 7ம் 8ந் திகதிகளில் கமிஷன் முன்னிலையில் ஆஜராகுமாறு திருமதி காந்திக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தபோதிலும், சுற்றுப்பயணம் செய்யவிருப்பதால் தமக்கு வேறொரு திகதி தருமாறு திருமதி காந்தி விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கமிஷன் வேறு திகதியை ஒதுக்குவதென்று தீர்மானித்திருந்தது. (இ)

தெங்கு ஏற்றுமதி:

## 5கோடி 8லட்சம் சம்பாதிப்பு

கொழும்பு, வியாழன்

தெங்குப்பொருள் ஏற்றுமதிமூலம் கடந்த செப்டம்பர் மாதம் 5 கோடி 8 லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்பட்டுள்ளது.

இத்த ஏற்றுமதிமூலம் ஆகஸ்ட் மாதத்தை விட செப்டம்பரில் 1 கோடியே 51 லட்சத்து 74 ஆயிரம் ரூபா கூடுதலாகப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளையில் நாட்டில் தெங்குச் செய்கையை ஊக்குவிக்க அரசு உலக வங்கியிடம் கடன் பெறவுள்ளது. (இ)

## அமைச்சருடன் கி.மாகாண எம்.பி.க்கள்

கொழும்பு, வியாழன்

கிழக்கு மாகாண தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பீ. களும், ஐக்கிய தேசியக்கட்சி எம்.பீக் களும் நேற்று நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தைச் சந்தித்து கிழக்குமாகாணப் பிரச்னைகள் பற்றி ஆலோசித்ததாகத் தெரிகின்றது. தமிழர் கூட்டணியைச் சேர்ந்த திருவாளர்கள் ராஜதுரை, சம்பந்தர், கணேசலிங்கம், கனகரத்தினம் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி எம் பிக்களுடன் சேர்ந்து இப் பேச்சுகளில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது. (ம)

...

## பிலிப்பைன்ஸ் மகாநாடு

### யாழ்மாவட்டத்தில் இருந்து இருவர் செல்வர்

மாவிட்டபுரம், வியா.

பிலிப்பைன்சில் நடைபெறவிருக்கும் கிராம அபிவிருத்தி கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்தும் இரு கிராம அபிவிருத்தி அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்சில் ஒன்றரை மாத காலத்திற்கு நடைபெறவுள்ள கிராம அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி ஆகியன சம்பந்தப்பட்ட கருத்தரங்குக்கு இலங்கையிலிருந்து செல்லும் குழுவில் யாழ. மாவட்டத்திலிருந்து பருத்தித்துறை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஜே. எஸ். பிரட்றிக், சாவகச்சேரி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு ஜோன் தேவசகாயம் ஆகியோர் இடம் பெறுகிறார்கள்.

# சைவக்குருத்தினிகள் இல்ல கட்டிட வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி சைவக்குருத்தினிகள் இல்லத்திற்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் சைவப் பெரியார் ஒருவரின் நன்கொடையினால் 40 ஆயிரம் ரூபா செலவில் இக் கட்டிடம் கட்டப்படுகிறது. சைவக்குருத்தினிகள் இல்லம் கைதடி இலங்கை சைவ அநாதை இல்லத்தில் கடந்த விஜயதசமி தினத்தன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது தெரிந்ததே.

சைவக்குருத்தினிகள் இல்லத்திற்கு அரங்கோ அதிபர் திரு. இ. அரசரத்தினம் இரு தையல் மெஷின்களை அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளார். அங்குரார்ப்பணத் தினத்தன்று மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசாவின் முயற்சியில் மலேசியாவிலிருந்து பெறப்பட்ட 5000 ரூபா கையளிக்கப்பட்டது.

இவ் இல்லத்தில் சேர்ந்துபணியாற்றுவதற்குப் பல பெண்கள் ஆர்வம் தெரிவித்துள்ளனர். மறவன்புலோவைச் சேர்ந்த சி. அருணுதேவி, தொல்புரம் சி. விசா ஆகியோர் இவ்வில்லத்தின் திட்டங்களுக்கமைய ஒழுகி நடப்பதற்கு முன்வந்துள்ளனர். இப்பணியில் சேருவோருக்குச் சீருடை, உணவு, வாகனம் முதலியன இலவசமாக வழங்கப்படும்.

இல்லத்தின் பாதுகாவலராகவும் பொறுப்பாளராகவும் திரு. ஆ. கந்தையா தொண்டாற்றி வருகிறார். (கா-அ)

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி!

மட்டுநகர், வியா

மட்டக்களப்பில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது விவசாயி ஒருவர் பலியானார்.

மட்டக்களப்பிலிருந்து 4 மைல் தொலைவில் உள்ள நசிவான்வெள்ளி என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 23 வயதான விநாயகமூர்த்தி என்பவர் இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

கடந்த திங்கள் இரவு 10 மணிக்கு விநாயகமூர்த்தி தமது வாடிக்குச் சென்றுகொண்டிருந்தபோது வயல் வெளியில் சுடப்பட்டாராம்.

பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். (இ)

# யாழ். - திருமலைக்கோஷ்டி மோதுகின்றன

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். தெரிவுக் கோஷ்டிக்கும் திருமலை தெரிவுக் கோஷ்டிக்குமிடையே உதைபந்தாட்ட மோதலொன்று இம்மாதம் 20-ம் திகதி திருக்கோணமலையில் நடைபெறும்.

இப்போட்டியே தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் இவ்வாண்டின் சிறந்த மோதலென விளையாட்டு ரசிகர்கள் கருதுகின்றனர்.

இப்போட்டியை யாழ். உதைபந்தாட்ட லீக் ஒழுங்கு செய்துள்ளது. யாழ். தெரிவுக் கோஷ்டி தமது பயிற்சியை இம்மாதம் 4-ம், 5-ம், 6-ம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தவுள்ளது.

யாழ். தெரிவுக்கோஷ்டி இம்மாதம் 19-ம் திகதி திருமலை செல்கின்றது. (செ)

'தேசிய ஐக்கியம் என்ற போர்வையில்

# தமிழ் மக்களின் தனித்துவத்தை சிதைக்கும் முயற்சி

## மும்மொழித்திட்டம்பற்றி கூட்டணிப் பிரமுகர்

பண்டத்தரிப்பு,வியா

''திருத்தப்பட்ட புதிய அரசியல் திட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு சர்வ அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியாக வருபவர்கள் வல்லவராகவும் நல்லவராகவும் இருந்துவிட்டால் தமிழ் பேசும் மக்களுக்கும் நாட்டிற்கும் நன்மையுண்டு. அதே நேரத்தில் பேராசிரியர் எப். ஆர். ஜெயசூரியா போன்ற சிங்கள வகுப்புவாதிகள் ஜனாதிபதியாக எதிர்காலத்தில் பதவிக்கு வந்தால் தமிழ்மக்களின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்''.

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றில் ''அரசியல் சாசனத் திருத்தமும் தமிழர் எதிர்காலமும்'' என்னும் விடயம் பற்றி உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. மு. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

செல்வன் வி. சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. மு. திருநாவுக்கரசு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

'உலகிலுள்ள சில சோஷலிச நாடுகளின் அரசியல் சாசனத்தில் உப ஜனாதிபதி அந்நாட்டின் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபான்மையோரின் பிரச்னை முக்கிய பிரச்னையாக கருதப்படும் நமது நாட்டில் உப ஜனாதிபதி சிறுபான்மையோரின் பிரச்னை முக்கிய பிரச்னையாகக் கருதப்படும். நமது நாட்டில் உப ஜனாதிபதி சிறுபான்மை இனத்தவராக இருக்க வேண்டும். என்று அரசியல் சாசனத்தில் இடம் பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்குமெனக் கருதுகிறேன்.

'தனிச் சிங்களச்சட்டத்தில் ஒரு எழுத்தைக் கூடமாற்றாமல் பாடசாலைகளில் மும்மொழித்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல பிரதமர் இதை தந்திரமாகக் கொண்டுவரப்பார்க்கின்றார். தேசிய ஐக்கியம் என்றபோர்வையில் தமிழ் மக்களின் தனித்துவத்தை சிதைக்கும் முயற்சியே இந்த மும்மொழித்திட்டமாகும்.

# 'சாரணிய இயக்கம்மூலம் நற்பணிகள் புரியலாம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"1916-ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட ஐந்து சாரணக்குழுக்களில் புனித பத்திரிசியார் கல்லூரிக் குழுவும் ஒன்றாகும். துரதிருஷ்டவசமாக சிலகாலங்கள் இக்குழு இயங்காமல் போனதால் இக்குழு 58 வது குழுவாக இருக்க வேண்டி வந்தது. 1967-ம் ஆண்டிலிருந்து இக்குழு இயங்கி 10 வருட விழாவை இன்று கொண்டாடுகின்றது. இதன் சேவை பாராட்டப்படவேண்டியதாகும்."

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி சாரண இயக்க 10-வது ஆண்டு நிறைவுவிழாவில்உரையாற்றுகையில்சாரண இயக்க யாழ் மாவட்டஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி கூறினார்.

இவ்விழா திரு. சி. ஆர். யோசவ் தலைமையில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், "பாடசாலை மாணவர்கள் சாரண இயக்கத்தில் ஈடுபடும்போது முதல் இரு தவணைகளிலும் சமூக சேவைகளில் ஈடுபடுவதில் தீவிரம் காட்ட வேண்டும். மூன்றும் தவணை தங்களது படிப்புக்கு இடைஞ்சலில்லாமல் சாரண சேவையை நடத்தவேண்டும்.

"வடமராட்சியிலுள்ள கல்லூரி ஒன்றின் பரிசளிப்புக்கு நான் சென்றிருந்தபோது அக் கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் அதிக பரிசுபெற்றவர்கள் சாரணர்களாக இருந்தவர்கள். அத்துடன் சிறந்த பரிசுகளைப் பெற்றவர்களாகவும் சாரணர்களே விளங்கினார்கள்' என்றார்.

ஆசிரியர் திரு. நி. நவரட்ணம் இவ்விழாவில் 'தரு' சின்னத்தைப் பெற்றுக் கொண்டார். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண ஏ.பிரான்சிஸ் அடிகள்கல்லூரி சாரண குழுத்தலைவர் திரு. டபிள்யூ. ஜே. நவரட்டிம், திரு. ஜி. சூசைதாசன் ஆகியோரும் உரையாற்றினர். சாரணச் சேவையின் பல துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (கூ-உ)


உறுதியானதும்

நீடித்து உழைப்பதும்

தன்னிகரற்றதுமான

**வைத்திலிங்கம்ஸ்**

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

இரும்புவியாபாரிகள்

450, பழைய சோனகதெரு,

கொழும்பு - 12.

தொலைபேசி: 33143 — 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


விவசாயிகள் - பொதுமக்களுக்கிடையில்

# தரகர் தொல்லை நீங்க வேண்டும்

## பேரவையில் 'அமிர்'

கொழும்பு, வியா.

விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையில் உள்ள தரகர்களின். தொல்லை ஒழிக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் கேட்டுக்கொண்டார்.

அனுராதபுரம் எம். பி. திரு. கே. டி. எம். பண்டார கொண்டுவந்திருந்த தனி நபர் பிரேரணைமீது நடந்த விவாதத்தில் அவர் பேசினார்.

விவசாயிகள் பாடுபட்டு உற்பத்தி செய்யும்பொருட்களுக்கு தகுந்த வருமானம் கிடைக்க வேண்டும். அவர்களிடம் குறைந்த விலையில் வாங்கப்படும் பொருட்கள் வியாபாரிகளிடம் அதிக விலைகளுக்கே கிடைப்பதாய் இருக்கின்றன. வடபகுதியில் உற்பத்தியாகும் பொருட்கள் கொழும்பில் இரண்டு மூன்று மடங்கு அதிகமான விலையில் விற்கப்படுகின்றது. இதற்குத் தரகர் முறையே காரணம் என்றார் திரு. அமிர்தலிங்கம்.

விவசாயிகளுக்கும், நுகர்வோருக்குமிடையிலுள்ள இடைவெளி நீக்கப்படவேண்டும். இதற்கு தரகர்கள் ஒழிக்கப்பட்டாலே இது சாத்தியமாகும் என்றார் அவர்.

தேசிய அரசுப் பேரவை நிகழ்ச்சிகளை பிரமுகர்கள் பகுதியிலிருந்து திருமதி அமிர்தலிங்கம் இன்று அவதானித்துக் கொண்டிருந்தார். (ம)

# வலைப்பந்தாட்டம்

வவுனியா, வியா

வவுனியா மகாவித்தியாலய வலைப்பந்தாட்ட மாணவிகள் கோஷ்டிக்கும், வவுனியா மகாவித்தியாலய பழைய மாணவிகள் கோஷ்டிக்குமிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி வவுனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பழைய மாணவிகள் கோஷ்டி 16-8 கோல்களால் மகாவித்தியாலய கோஷ்டியைத் தோற்கடித்தது. (உ)

பண்ணை அநாதை இல்லக் கட்டிடம்

# இராணுவத்திற்கு வழங்குவதில்லை எனமுடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்ணை அநாதை இல்லம் அமைந்துள்ள 5 ம் ஜோர்ஜ் ஞாபகார்த்த மண்டபத்தை இராணுவத்தினருக்கு, வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் கூடிய 5 ம் ஜோர்ஜ் ஞாபகார்த்த கமிட்டியினர் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளனர்.

சட்டத்தரணி எஸ். செல்வராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மண்டபத்தை வழங்க முடியாத காரணத்தை கமிட்டி செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை விளக்கிக் கூறினார்.

இக்காரணங்களை, அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலாவுக்கு விளக்கிக் கூறுவதற்கு டாக்டர் பசுபதி தலைமையில் ஒரு உப குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் திரு கேர்ணல் தர்மபாலா, உதவிச் செயலாளர் திரு. சேபால அட்டிகல ஆகியோரை 5 ம் ஜோர்ஜ் தர்மஸ்தாபன கமிட்டி பிரதிநிதிகள் குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

கமிட்டிச் செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, திரு. எஸ். செல்வராசா, சகோதரர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றனர்.

இம்மண்டபத்தை இரண்டு மாத காலத்திற்கு தற்காலிகமாக இராணுவத்திற்கு வழங்குமாறு இக்குழுவிடம் கேட்டபோது, இதுபற்றி கமிட்டி கூடி முடிவைத் தெரிவிப்பதாக, கமிட்டி செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். (க-அ)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

புலோலி சினிமாஸ்
[பருத்தித்துறை]
தினசரி பி. ப. 2-30, 7-00
பவானி

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
NIGHT OF THE BIG HEAT
(Color)

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
அனேக இரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்
6-11-77 வரை மட்டும் கடைசித்
தினமாகக் காண்பிக்கப்படும்.
தினசரி 10-30, 2 30, 6-30, 9-45
திலிப்குமார் மதுபாலா பிருதிவிராஜ்கபூர்
அக்பர்
(தமிழ்) - புதிய பிரதி
நடனங்கள் கலரில்

கடைசி வாரம்
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30, 6-30, 9-45
மனோஹரா எம். ஜி. ஆர். - லதா நடித்த
(யாழ்ப்பாணம்)
உழைக்கும் கரங்கள்

9-11-77
சிவாஜி - ஜெமினி - நாகேஷ் நடித்த
உனக்காக நான் (கலர்)

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்.
துணிவே துணை

லிடோ காலை 9-30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும்.
காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
போன்: 7693
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

நான்காவது வெற்றி வாரம்!
ராஜா-
யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)



இலங்கை ரூபாவில் டிக்கட்பெற்று

# இந்தியாவில் எப்பகுதிக்கும் ரயில்மூலம் பயணவசதி

## போக்குவரத்து மந்திரி ஏற்பாடு

கொழும்பு, வியாழன் இலங்கையிலிருந்து இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் ரயிலில் சென்று திரும்புவதற்கான ஏற்பாடுகளை போக்குவரத்து அமைச்சர் ஜனுப். எம். எச். முகமட் செய்துள்ளார்.

அமைச்சர் ஜனுப் முகமட் இந்தியாவிலிருந்து இன்று நாடு திரும்பியபோது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஜனுப் முகமட் இந்திய ரயில்வே அமைச்சர் திரு. மது தண்டவதேயுடன் நடத்திய பேச்சுவார்த்தை களை அடுத்தே இப் பிரயாணச் சலுகைத்திட்டம்பற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை இலங்கை ரூபாவின்மூலம் இலங்கையில்பெறப்பட்ட ரயில் டிக்கட்டுடன் சென்னைவரை செல்லக்கூடியதாக இருந்தது.

புதிய திட்டத்தின்படி இலங்கையில் பெறப்படும் ரயில் டிக்கட்டுடன் இந்தியாவின் சகல பகுதிகளுக்கும் செல்ல முடியும்.

அமைச்சர் ஜனுப் முகமட் இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இந்தியாவிலிருந்து ரயில் என்ஜின்கள், பெட்டிகள், பஸ்கள் ஆகியனவும் இறக்குமதிசெய்யப்பட உள்ளன. (இ)

சுதுமலை லட்சுமி கொலைவழக்கு:

# இருவருக்குச்சிறை இருவர் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி சுதுமலைக் கொலைவழக்கில் 2ம் எதிரிக்கு 5 வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும், முதல் எதிரிக்கு 3 வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது

இவ்வழக்கில் சுதுமலையில் 76ம் ஆண்டு ஜனவரி 15ந் தேதி கிருஷ்ணசாமி தேவராசா, கிருஷ்ணசாமி தவராசா சந்தையா சுப்பிரமணியம், பசுபதி செல்வராசா ஆகியோர் சட்ட விரோதக் கூட்டத்தின் உறுப்பினராக இருந்ததாகவும் பொன்னுச்சாமி லட்சுமியைக் கொலை செய்ததாகவும், ஞானமுத்து ஐயாத்துரையைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் சட்டத்தரணி செல்வின் சென்ட் உதவியுடன் ஆஜராஞர். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்

நேற்று நண்பகல் விசாரணை முடிந்ததும் ஜூரி சபையினர் தனிமையில் கூடி ஆலோசித்து முடிவைத் தெரிவித்தனர்.

சட்ட விரோதக் கூட்ட உறுப்பினராக இருந்த குற்றத்திற்கு நான்கு எதிரிகளும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இக்குற்றத்திற்கு 1ம் 2ம் எதிரிகளுக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 4ம், 5ம் எதிரிகள் தலா 1,000 ரூபா உறுதிப் பிணையில் 3 வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கைமோசக் கொலை முயற்சிக் குற்றத்திற்கு 1ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். இவருக்கு 3 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கைமோசக் கொலைக் குற்றத்திற்கு 2ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். இவருக்கு 5 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

# இளைஞர்களுக்கு மீண்டும் தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி அரசாங்க தேசிய தொழிற் பயிற்சிச் சபை மீண்டும் கைவினைப் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு திரவில் பதிவுசெய்யவாரம் பித்துள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனினும் 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பப்பத்திரங்களையும், விபரங்களையும் பெற விரும்புகின்றவர்கள் தேசியத் தொழிற்பயிற்சிப் பணிப்பாளரிடம் எழுதிப்பெறலாமே தவிர நேரில் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய தொழிற்பயிற்சிச் சபை அதன்கீழ் பயிற்சிபெற்றவர்களுக்குத்தேவையானவேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அ-1 என வகுக்கப்பட்ட தொழில்களுக்கு க. பொ. த. சாதாரணதரத்தில் தமிழ் அல்லது சிங்களத்துடன் கணிதம், எண்கணிதம், வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்கவேண்டுமென்றும் அல்லது என். சி. ஜி. ஈ யில் தமிழ் அல்லது சிங்களம், கணிதம் உட்பட 6 பாடங்களில் ஏ. பி, சி தரங்களின்படி சித்தி பெற்றிருக்கவேண்டுமென்றும், அ-2 என்ற வகுக்கப்பட்ட தொழில்களுக்கு 7ம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிற்பயிற்சிச் சபை அதன் சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு மேலதிக உத்தியோகத்தவர்களையும் நியமிக்கவுள்ளது. (கா-அ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும்
வாலிபன்
(கலர்)

RIO (Jaffna)
Daily 4 Shows
MURPHY'S WAR
(Western)

அனுராதபுர மாவட்டத்தில்

# 25 'நடமாடும்' கச்சேரிகள்

கொழும்பு, வியாழன் அனுராதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருபத்தைந்து நடமாடும் கச்சேரிகளை அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

விவசாயிகளின் நலன்களை இக் கச்சேரிகள் கவனிக்கும் என்று அனுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. அமரஹேவ மட்டும தெரிவித்தார்.

கிராமப்புறங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களின் சில முக்கிய தேவைகளைக் கவனிப்பதற்குச் சிரமப்பட்டு நகரப்புறம் வரவேண்டியுள்ளது. இதனை நடமாடும் கச்சேரிகள் கிராமப்பகுதிகளிலேயேதீர்த்து வைக்கும் என்று தெரிவித்த அனுராதபுரம் அரசாங்க அதிபர், நீர்ப்பாசனப்பிரச்னை, மற்றும் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை விநியோகிப்பது, சேனைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள் பெறுவது நற்சாட்சிப் பத்திரங்கள் பெறுவது, காட்டு மரங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களைப்பெறுவது போன்ற விஷயங்களில் நடமாடும் கச்சேரிகள் விவசாயிகளுக்கு உதவிசெய்யும் என்றும் கூறினர்.

முதல் நடமாடும் கச்சேரி மகாவில்லச்சியாவில் அண்மையில் அமைக்கப்பட்டது. இரண்டாவது கச்சேரி ஹொறவப்பொத்தானைக்கு அண்மையில் நிறுவப்படும்.

### மணிவாக்கு

ஒருவன் ஒரு களவைச் செய்கிறான். இன்னொருவன் அதற்குத் துணை புரிகிறான். இன்னொருவன் களவெடுக்க எண்ணிக் கொண்டிருக்கிறான். மூவரும் கள்வரே.

— காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## பாதிக்கப்பட்ட மக்கள்

கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இந்திய அரசு எட்டு லட்சம் ரூபாய் பணம் வழங்கியுள்ளது.

இதற்கான காசோலையை இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. குருபச்சான்சிங் நேற்று பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் கையளித்துள்ளார்.

இதேபோன்று ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் தூதுவரும் பிரதம மந்திரியிடம் சுமார் 6 லட்சம் ரூபாய் காசோலையை தமது நாட்டின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியிருக்கிறார்.

வேறு பல நாடுகளும் இவ்வாறு ஏற்கனவே பணமாகவும், பொருளாகவும் இலங்கை அரசுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியுள்ளன.

இதுதவிர தனிப்பட்ட பொதுநல ஸ்தாபனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பணமும், பொருளும் திரட்டி வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் இன்னமும் ஆங்காங்கே அகதி முகாம்களிலேயே இருந்து வருகிறார்கள்.

இவர்களின் பராமரிப்பில் அதிகாரிகள் உரிய முறையில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையென புகார்கள் கிளம்பியுள்ள அதே சமயம் இம்மக்களைத் தமது பழைய இடங்களுக்கே திரும்பிப் போகும்படி வற்புறுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

உறவினர்களை இழந்தும் உடைமைகளைப் பறிகொடுத்தும் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தமிழ்ப்பகுதிகளை நோக்கி ஓடிவந்த இந்த மக்களை மீண்டும் அதே இடங்களுக்குத் திரும்பிப் போகும்படி வற்புறுத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது. அங்கு செல்வதால் மீண்டும் முன்போல் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழமுடியும் என்று நம்பிக்கை ஏற்பட்டாலன்றி அவர்கள் அங்கே போகத் துணியமாட்டார்கள்.

அகதி முகாம்களில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் தாம் முன்பு இருந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவுமில்லை.

இந்த நிலைமையில் அவர்களின் பிரச்னையை மனிதாபிமானத்தோடு அரசு அணுகவேண்டும். அவர்களின் எதிர்காலப் பாதுகாப்புக்கும், அமைதியான வாழ்வுக்கும் வசதியுள்ள பகுதிகளில் அவர்களை குடியமர்த்துவதே சிறந்த காரியம்.

இந்தப் பணியில் தொண்டர் ஸ்தாபனங்கள் ஏற்கனவே இறங்கியுள்ளது வரவேற்கத்தக்கது.

அதற்காக அரசு பாராமுகமாக இருந்துவிடமுடியாது. இந்த மக்களின் எதிர்கால வாழ்வுக்கு உறுதியான செயல்திட்டமொன்றை அரசு செயல்படுத்தவேண்டும். இல்லையெனில் ஒரு பொதுநல ஸ்தாபனத்திடம் இப்பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இந்த நல்ல காரியத்துக்கு வெளிநாடுகள் பலவும் வழங்கியுள்ள பணம் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதை பிரதம மந்திரி உறுதி செய்வார் என்று நம்புவோம்.

உழைப்பாளிகளான இம்மக்களை ஒரே இடத்தில் பல நாட்கள் தங்க வைப்பது அவர்களின் உடல் நலனுக்கும் உழைப்புக்கும் குந்தகம் விளைவிப்பதாகவே முடியும்.

தேசிய அரசுப்பேரவை:

# மைத்திரி கிளப்பிய உரிமைப் பிரச்னை

தேசிய அரசுப் பேரவை கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தலைமையில் கூடியபோது, சபை ஆரம்பித்த அரை மணி நேரத்திலேயே, நுவரெலியா மஸ்கெலியாத் தொகுதி இரண்டாவது உறுப்பினர் திரு. அநுரா பண்டாரநாயகா கிளப்பிய ஓர் உரிமைப்பிரச்னை தொடர்பான விவகாரம் சபையில் பெருமளவு நேரத்தை ஆக்கிரமித்ததுடன் பெருமளவு நேரம் சபையில் பரபரப்பையும் ஊட்டிக்கொண்டிருந்தது.

### மைத்திரி கிளப்பிய உரிமைப் பிரச்னை

திரு. அநுரா பண்டாரநாயகாவுக்கு முன்னதாக, மதவாச்சித் தொகுதி உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான திரு. மைத்திரிபால சேனநாயகாவும் ஓர் உரிமைப் பிரச்னையைக் கிளப்பினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களின் விபரங்களை வெளியிடுவது தொடர்பாகக் கடந்த அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்று பிழையான ஒரு செய்தியைப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருப்பதாக திரு. மைத்திரிபால சேனநாயகா தெரிவித்தபோது "இதில் என்ன உரிமைப் பிரச்னை இருக்கிறது?" என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கேட்டார்.

1975ம் ஆண்டு தாம் இது தொடர்பான மசோதா ஒன்றைக் கொண்டுவந்ததாக திரு. மைத்திரிபாலா சொன்னார்.

சபை விவகாரங்கள் தொடர்பான கண்ணியக் குறைவான செய்திகள் வெளியிடப்பட்டிருந்தால் உரிமைப் பிரச்னையைக் கிளப்பலாமென்றும், ஆனால் இது அப்படியின்றிப் பத்திரிகைப் பேரவையில் கிளப்பப்படவேண்டிய ஒரு பிரச்னையென்றும் சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தபோது, சபாநாயகர் "ஆனால், இது இச்சபையில் நடைபெற்ற விவகாரம் தொடர்பானது" என்றார்.

### எம். பி.க்களின் சொத்து விபரம்

அப்போது பிரதமர், "உறுப்பினர்கள் தங்கள் சொத்து விபரங்களை ஜனாதிபதியிடமே சமர்ப்பிக்கவேண்டும். அவர்கள் சமர்ப்பித்தார்களா என்பது பத்திரிகைகளுக்கு எவ்வாறு தெரியவரும்?" என்று கேட்டார்.

திரு. மைத்திரிபாலா, தானும் மற்றையோரும் சொத்து விபரத்தை ஜனாதிபதியிடம் அளித்திருப்பதாகச் சொன்னதும், தாம் அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த சபாநாயகர், மதவாச்சி உறுப்பினர் தனது உரிமைதொடர்பாக மட்டுமே பேசலாம் என்றும் மற்றையோர் பற்றிப் பேசமுடியாதென்றும் தெரிவித்தவர், பத்திரிகை அதன் செய்தியைத் திருத்துமென்று நம்புவதாகவும் சொன்னார்.

இதற்கிடையில், பிரதமரின் கேள்விக்கு திரு. மைத்திரிபாலா, தாம் 1975 ல் மசோதா கொண்டுவந்ததாக பதிலளித்துக்கொண்டிருந்தபோது, உடதும்பர உறுப்பினர் திரு. அத்தநாயக்கா குறுக்கிட்டு "1970 ல் ஆட்சிக்குவந்த நீங்கள், 1975 வரை என்ன செய்துகொண்டிருந்தீர்கள்" என்று கேட்டதும்–

"நானும் பிரதமரும் பேசிக்கொண்டிருக்கிறோம்; அதற்குள் ஏன் குறுக்கிடுகிறீர்; சபை ஒழுங்குபற்றி உங்களுக்கு மீண்டும் ஒரு தடவை வகுப்பு நடத்தவேண்டுமா" என்று கேட்டார் திரு. மைத்திரி.

### "நீ; நீர் பிரச்னை"

அப்போது, திரு. அத்தநாயக்கா, தன்னை 'நீ' என்று திரு. மைத்திரிபாலா குறிப்பிட்டதாகவும், அதனை அவர் வாபஸ்பெறவேண்டும் என்றும் சபாநாயகரிடம் முறையிட்டார்.

திரு. மைத்திரிபாலா, தாம் 'நீர்' என்றே குறிப்பிட்டதாகச் சொன்னார்.

அச்சமயம் திரு. அத்தநாயக்காவும், ஏனைய பின்வரிசை உறுப்பினர்களும் 'இல்லை' என்று கூச்சல் போட்டார்கள். சபாநாயகர் இதுபற்றி தாம் பின்னர் கவனத்திற்கெடுப்பதாகக் கூறியிருந்தார்.

திரு. மைத்திரிபாலா அமர்ந்ததும், 'நீ' என்ற சொல்லை அவர் வாபஸ் பெறவில்லை என்று திரு. அத்தநாயக்கா சபாநாயகரிடம் மீண்டும் முறையிடவே, அவ்விவகாரம் முடிந்துவிட்டதாக சபாநாயகர் தெரிவித்தார். (ம)

......

### தொண்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதம மந்திரியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. மைத்திரிபால சேனநாயக்க ஆகியவர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் ஆர். பிரேமதாஸ, வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி, நிதி அமைச்சர் ரொனி டி மெல், நீர்ப்பாசன மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் காமினி திஸநாயக்க, நீதிஅமைச்சர் கே டபிள்யு. தேவநாயகம், திட்டமிடல் பொருளாதார பிரதி அமைச்சர் எம். எச். நயினுமரிக்கார் ஆகியவர்களும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவில் சேர்ந்து பணியாற்ற முன்வரும்படி திரு. பிரேமதாஸ தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சபையில் அழைப்பு விடுத்தார். இதற்கு நல்லூர் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் பதிலளிக்கையில் இது தொடர்பான எல்லா அம்சங்களையும் ஆலோசித்த பின்னரே குழுவில் அங்கம் வகிப்பதில்லையென தமது கட்சி முடிவு செய்ததாக அறிவித்தார்.

யாழ். லங்கா

## ஆயுர்வேதக் கல்லூரி புதிய அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி அதிபராக ஸ்தாபக உறுப்பினரும், முன்னாள் அதிபருமான திரு. ஆர். ஈ. ஜெகோரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட இலங்கை சுதேச வைத்திய சபைக் கூட்டம் திரு. கு. விநோதன் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ஜெகோரத்தினத்தை சபையில் சேர்த்துக்கொள்வதென்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேறியது.

நிலைமை சீராகும்வரை மாணவர்களுக்கு வசதியாக கல்லூரியை மூடி, இம்மாதம் 14-ம் திகதி திறப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நேர அட்டவணை மற்றும் விஷயங்களைக் கவனிக்க உப குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

கல்லூரியின் உடமைகளைப் பாதுகாப்பதற்கு மேற்பார்வையாளராக டாக்டர் எஸ். பரஞ்சோதிநாதர் நியமிக்கப்பட்டதை சபை அங்கீகரித்தது.

## காரைநகர்—கச்சேரி புதிய பஸ் சேவை

ரய்ட்டாணம், வெள்ளி

காரைநகரிலிருந்து கச்சேரிக்கும், கச்சேரியில் இருந்து காரைநகருக்குமான புதிய பஸ் சேவையொன்று நேற்று முன்தினம்முதல்காரைநகர்டிப்போவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையின்படி முதல் சேவை காரைநகரிலிருந்து காலை 7 மணிக்கும் கச்சேரியிலிருந்து காலை 8-30 மணிக்கும் ஆரம்பமாகும். இச்சேவை மணித்தியாலத்துக்கு ஒரு தடவையாக நடைபெறும்

சேவை காரைநகர், யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியடி, ஊடாக கச்சேரியை சென்றடையும். இத்தகவலை காரைநகர் டிப்போ சிரேஷ்ட உத்தியோகத்தர் திரு. கே. ரி. ஜெயலிங்கம் தெரிவித்தார். (கெ)

## கூட்டுறவுச்சங்கக் கிளையில் திருட்டு

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பெருந்தொகையான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இதன் எதிரொலியாக அக்கிளைக் காவலாளி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2 ம் இலக்கக் கிளையான தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கிளையிலேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

இரவு நேரத்தில் மேற்படி கிளையின் யன்னல் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்த கொள்ளையர்கள் அரிசி, சீனி, சர்க்கரை, லக்ஸ்பிறே ரின்கள் என பெருந்தொகையான பொருட்களைக் களவாடிக் கொண்டு தலைமறைவானதுடன் இப்பொருட்களின் ஒரு பகுதியைக் கொண்டு செல்ல முடியாமல் இடைநடுவில் விட்டும் சென்றனராம்.

இது குறித்து சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து விசாரணையிலீடுபட்ட பொலிசார் அவர்களால் இடைவழியில் விட்டுச் செல்லப்பட்ட பொருட்களைக் கைப்பற்றியதுடன், 56 றாத்தல் அரிசியுடன் நபர் ஒருவரையும் கைது செய்து விசாரணை செய்துவருகின்றனர்.

இக்களவு குறித்து தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. மகாதேவா, பொதுமுகாமையாளர் திரு. சி. நவரத்தினம் ஆகியோர் நேரில் பார்வையிட்டதுடன், மேற்படி கிளையின் இரவு நேரக் காவலாளியையும் தற்காலிக வேலை நீக்கம் செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

## யாழ்.ஆஸ்பத்திரியில்கலவை மருந்துக்குத் தட்டுப்பாடாம்

### கோப்பாய் எம். பி. அமைச்சருக்குத் தந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பெரியாஸ்பத்திரியில் கலவை மருந்தை வெளியில் வாங்கிக் கொள்ளுமாறு நோயாளி ஒருவருக்கு சிபார்சு செய்யப்பட்டதாம்.

இதுபற்றி கவனம் செலுத்துமாறு கோப்பாய் எம். பி திரு சி. கதிரவேலுப்பிள்ளை சுகாதார அமைச்சரைத் தந்தி மூலம் கோரியுள்ளார்.

இடைக்காட்டைச் சேர்ந்த ஒருவர் நோயாளியான தமது மகனை கூட்டிக்கொண்டு டாக்டரிடம் சென்றாராம். டாக்டர் கலவை மருந்துடன் குளிசைகளுக்கும் எழுதிக் கொடுத்தாராம்.

மருந்து பெறுமிடத்தில் "கலவை மருந்து முடிந்துவிட்டது. வெளியே போய் எடுங்கள்" என்று பதிலளிக்கப்பட்டதாம். ...... [கெ-உ]

## பொதுச்சந்தை

வவனியா, வியாழன்

வவனியா நெடுங்கேணியில் வெகுவிரைவில் கிராம சபையால் பொதுச்சந்தை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்காக ரூபா 25,000 மாவட்ட வரவு செலவு திட்டத்தில் வவனியா அரசாங்க அதிபரால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாக வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

தற்பொழுது தற்காலிகமாக அமைக்கப்பட்ட சந்தையே இருப்பதாகவும் அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். ......

### இருவருக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை, கொள்ளை முயற்சிக் குற்றச்சாட்டுக்களில் 4ம், 5ம் எதிரிகள் சுற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் விடுதலைசெய்யப்பட்டனர். (க-அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தார் ஈசல் யாழ்ப்பாணம் வெள்ளோவில் (?) வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registered as News paper in Sri Lanka.